DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.128/2022

**prosecution witness: LW-7 as PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சசிக்குமார் | தொழில்/ பதவி | : | ஆய்வாளர், E4-அரசு ராஜாஜி தலைமை மருத்துவமனை காவல் நிலையம், மதுரை மாநகர். |
| த/பெ. | : | சுந்தர்ராஜன் | வயது | : | 52 |
| ஊர் | : | மதுரை | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>22.05.2026</u>

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது மதுரை மாநகர், E4-அரசு ராஜாஜி தலைமை மருத்துவமனை காவல் நிலையயத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.10.2020ம் தேதியன்று 14.00 மணியளவில் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மாங்காடு கிராமம், சுரேஷ் மனைவி சித்ரா வயது 35/2020 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின்பேரில் நிலையக் குற்ற எண் 369/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act 2002-ன்கீழ் வழக்கு பதிவு செய்து அன்றே கணம் நீதித்துறை நடுவர் இராமேஸ்வரம் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.1, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. )**

2) அன்றைய தினமே வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேதுமுனியாண்டி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.)** பின்னர் சம்பவ சாட்சிகளான ராணி, ராமதாஸ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்பு எதிரியை தேடிவந்த நிலையில் 02.11.2020ம் தேதி 18.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து காவல் நிலையப் பிணையில் விடுவித்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட சாட்சிகளான சித்ரா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.இஸ்மாயில் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு அசலுடன் கூடிய காயச்சான்றினை பெற்றேன். **விபத்து பதிவேட்டு அசல் அ.சா.ஆ.5 மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act 2002–ன்கீழ் 21.02.2021ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அ.சா.2 விசாரணையில் சம்பவம் ஈஸ்வரி அம்மன் கோவில் தெருவில் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சுடுகாட்டான்பட்டி கிராமத்தில் இருந்து ஈஸ்வரி அம்மன் கோவில் 1 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். சுடுகாட்டான்பட்டியில் இருந்து ஈஸ்வரி அம்மான் கோவிலுக்கு நடந்து வந்தால் சுமார் 20 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் ஈஸ்வரி அம்மன் கோவில் தெருவில் சம்பவம் நடைபெற்றதாகவோ அ.சா.2 யை சத்தம்போட்டு அழைத்த பின்னர் அவர் வந்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1ஐ எதிரி இரும்பு கம்பியால் அடித்து காயப்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அந்த கம்பி கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கும் எதிரிக்கும் குடும்பப் பிரச்சனை இருந்து அவர்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

2. புகார்தாரரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.22 10:04:28 +0530